**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், செய்யாறு.**

**நாள். 12.03.2026.**

**<u>முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், செய்யாறு.</u>**

**<u>அசல் வழக்கு எண். 129/2025</u>**

2026-ம் ஆண்டு மார்ச் மாதம் 12ம் நாள் வியாழக்கிழமை வாதி தரப்பு சாட்சியின் சாட்சியம். உறுதிமொழிச் சட்டம் 1969, பிரிவு 3-ன் படி என்னால் ஆணையிடப்பட்டு, சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு விசாரணை செய்யப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | குமாரசாமி | மாவட்டம் | : | திருவண்ணாமலை |
| த/பெ | : | சுப்பாராயலு | வயது | : | 57 |
| ஊர் | : | பாராசூர் | தொழில் | : | ஓட்டுனர் |

**<u>வா.சா. 1 (குமாரசாமி) : வாதி தரப்பில் முதல் சாட்சியின் முதல் விசாரணை:</u>**

நான் இவ்வழக்கில் **வாதி தரப்பு முதல் சாட்சி (வா.சா.1) ஆவேன்.** எனது வாக்கு மூலத்தை பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். எனக்கு எழுத படிக்க தெரியும். பிரமாண வாக்குமூலத்தை படித்துப் பார்த்துதான் கையொப்பம் செய்தேன்.

**கீழ்கண்ட ஆவணங்கள் குறியீடு செய்யப்படுகிறது.**

1. 08.12.2008 தேதியிட்ட செய்யாறு சார்பு நீதிமன்ற அ.வ.எண். 20/2005 என்ற வழக்கின் இறுதிநிலைதீர்ப்பாணை நீதிமன்ற சான்றிட்ட நகல் **வா.சா.ஆ.1 ஆக** குறியீடு செய்யப்படுகிறது.
2. வாதிகளின் சகோதரியான லட்சுமி என்பவர் 1ம் வாதியின் மகனான ஹரீஷ் என்பவருக்கு மதிப்பு காணாத பதிவு செய்யப்பட்ட உயில் சாசன ஆவணத்தின் சான்றிட்ட நகல் **வா.சா.ஆ.2 ஆக** குறியீடு செய்யப்படுகிறது.
3. 08.09.2016 தேதியிட்ட 1ம் வாதி 2ம் வாதி பெயருக்கு எழுதிக் கொடுத்த செட்டில்மெண்ட் பத்திர எண் 959/2016 இணையம் மூலம் பெறப்பட்ட சான்றிட்ட நகல் **வா.சா.ஆ.3 ஆக** குறியீடு செய்யப்படுகிறது.
4. 08.09.2016 தேதியிட்ட 2ம் வாதி 1ம் வாதி பெயருக்கு எழுதிக் கொடுத்த செட்டில்மெண்ட் பத்திர எண் 960/2016 இணையம் மூலம் பெறப்பட்ட சான்றிட்ட நகல் **வா.சா.ஆ.4 ஆக** குறியீடு செய்யப்படுகிறது.
5. 2ம் வாதி பெயரில் உள்ள கணினி பட்டா எண்கள். 558, 1ம் வாதி பெயரில் உள்ள கணினி பட்டா எண் 2143, அரீஷ் பெயரில் உள்ள பட்டா எண் 2297, 2298 இணையம் மூலம் பெறப்பட்ட சான்றிட்ட நகல் **வா.சா.ஆ.5 ஆக** குறியீடு செய்யப்படுகிறது.
6. மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற ரிட் மனு எண் 28453/2024ல் பிறப்பிக்கப்பட்ட உத்தரவு இணையம் மூலம் பெறப்பட்ட கணினி நகல் நகல் **வா.சா.ஆ.6 ஆக** குறியீடு செய்யப்படுகிறது.

7. 10.01.2025 தேதியிட்ட செய்யாறு சார்ஆட்சியர் அவர்களின் செயல்முறை உத்தரவு அசல் **வா.சா.ஆ.7 ஆக** குறியீடு செய்யப்படுகிறது.

8. 18.08.2025 தேதியிட்ட வாதிகள் பிரதிவாதிகளுக்கு அளித்த வழக்கறிஞர் அறிவிப்பு அலுவலக நகல் **வா.சா.ஆ.8 ஆக** குறியீடு செய்யப்படுகிறது.

9. 1ம் பிரதிவாதி மேற்படி அறிவிப்பினை பெற்றுக்கொண்டதற்கான அஞ்சல் ஒப்புதல் அட்டை அசல் **வா.சா.ஆ.9 ஆக** குறியீடு செய்யப்படுகிறது.

10. 2ம் பிரதிவாதி மேற்படி அறிவிப்பினை பெற்றுக்கொண்டதற்கான அஞ்சல் ஒப்புதல் அட்டை அசல் **வா.சா.ஆ.10 ஆக** குறியீடு செய்யப்படுகிறது.

11. 3ம் பிரதிவாதி மேற்படி அறிவிப்பினை பெற்றுக்கொண்டதற்கான அஞ்சல் ஒப்புதல் அட்டை அசல் **வா.சா.ஆ.11 ஆக** குறியீடு செய்யப்படுகிறது.

12. 28.07.2025 தேதியிட்ட தாவா சொத்து குறித்து ஏற்படுத்தப்பட்ட கிரைய ஆவணம் இணையம் மூலம் பெறப்பட்ட சான்றிட்ட நகல் **வா.சா.ஆ.12 ஆக** குறியீடு செய்யப்படுகிறது.

**(பிரதிவாதிகள் நீதிமன்றத்தால் ஒருதலைப்பட்சமாக்கப்பட்டுள்ளார்கள்)**

**தாவாப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சி அதை படித்து பார்த்து/படிக்கக் கேட்டு சரியென்று ஒப்புக்கொண்டு கையெழுத்து செய்தார்.

K NALEENI

Digitally signed by K NALEENI
Date: 2026.03.12 17:44:17 +0530

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
செய்யாறு